


OFFICE OF THE CURATOR
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
RECEIVED
24 ஏப் 1979
79.

# தேனோலை

பதிப்பாசிரியர்:
**கொடுமுடி சண்முகப் பிரகதம்**




தேனோலை-20
1979 ஏப்பிரல்

# தேனோலை

கொங்கேழு தலங்களுள் சிறப்பு வாய்ந்த மலைத் தலமான திருச்செங்கோடு பற்றிய பண்டை வரலாற்றைத் தேனோலையில் வெளியிடுகின்றோம். கல்வெட்டுகள், பட்டயங்கள், கோயில் விபரங்கள், நூல் விபரங்கள் அனைத்தும் கொண்டதாக இருக்கும். தேனோலை நான்கு இதழ்களில் இவை இடம் பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1978 | ஏப்பிரல் | — | முதல் பகுதி |
| 1978 | அக்டோபர் | — | இரண்டாம் பகுதி |
| 1979 | சனவரி | — | மூன்றாம் பகுதி |
| 1979 | ஏப்பிரல் | — | நான்காம் பகுதி |




வரலாற்றைத் தொகுத்து
அளிப்பவர்

**பெ. அர்த்தநாரீசுவரன்**
M.A., M.Phil.,
Post Graduate Diploma in
Epigraphy and Archaeology.,

ஆய்வாளர்,
மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்.



பதிப்பாசிரியர்

**கொடுமுடி சண்முகப் பிரகதம்,**

11-ஆ, இரண்டாம் பெருஞ்சாலை,

இந்திரா நகர், சென்னை-600 020.

# சேக்கிழார்

## பெரியபுராணம்

திருஞானசம்பந்தர் திரு ஈங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கிவிட்டு, திருச்செங்கோடு வருகின்றார்; திருச்செங்கோட்டில் குளிர் மிகுந்து காணப்படுகின்றது. அடியவர்களுக்கு நளிர்சுரம் வர, 'அவ்வினைக் கிவ்வினை' என்று தொடங்கி ஒரு பதிகம் பாடிக் குளிர் சுரத்தைப் போக்குகின்றார்; பின்னர் திருப்பாண்டிக் கொடுமுடி செல்கின்றார். இதனைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தில் 323 ஆம் பாட்டு முதல் 338 ஆம் பாட்டு வரைப் பாடியுள்ளார். இதில் 'தம்பெருமான் கோயில்' என்று குறிப்பிடுகிறார். இதுவே தம்பிரான் கோயில் என்றும் நிலத்தம்பிரான் கோயில் என்றும் மருவியிருக்கலாம்.

செங்கட் குறவரைத் தேவர் போற்றும் திகழ்திரு ஈங்கோய் மலையில் மேவும்
கங்கைச் சடையார் கழல்ப ணிந்து கலந்த இசைப்பதி கம்பு னைந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையும் மற்றும் புறத்துள்ள தானங்க ளெல்லாம் போற்றிக்
கொங்கிற் குடபுலஞ் சென்ற ணைந்தார் கோதில்மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார். 323.

அண்டர்பிரான் ஆலயங்கள் அம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள் தொழுதணைந்தார்
கொண்டல்பயில் நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர். 324.

அந்நகரில் வாழ்வாரும் அடியவரும் மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப் பயில்அணிகள் பல அமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார்
செழுங்கோயில். 325.

தம்பெருமான் கோயிலினுள் எழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
இம்பரும்உம் பரும்ஏத்த இன்னிசைவண் டமிழ்பாடிக்
கும்பிடும்ஆ தரவுடன்அக் கோநகரில் இனிதமர்ந்தார். 326

அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித் திருநணா வினை இறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார். 327.

ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையும் நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்துபெயல் ஒழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெறா விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவம் எய்தியதால். 328.

அளிக்குலங்கள் சுளித்தகல அரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மைஎனத்
துளித்தலைமேல் அறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்.
329.

மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைசுளுங் குலைந்தசையக்
குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடங்குவதும் ஆகுமால். 330.

நீடியஅப் பதிகளெல்லாம் நிரைமாடத் திறைகள் தொறும்
பேடையுடன் பவளக்கால் புறவொடுங்கப் பித்திகையின்
தோடலர்மென் குழல்மடவார் துணைக்கலச வெம்முலையுள
ஆடவர்தம் பணைத்தோளும் மணிமார்பும் அடங்குவன.
331.

அரிசனமும் குங்குமமும் அரைத்தமைப்பார் அயலெல்லாம்
பரியஅகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரியுமிழ்பே ழ் வாய்த்தோணி இரும்பீர்ப்பார்
இடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம். 332.

அந்நாளிற் கொடிமாடச் செங்குன்றூர் அமர்ந்திருந்த
மெஞ்ஞானப் பிள்ளையா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னாளும் அந்நாட்டிற் பயின்றதனால் பனித்தகுளிர்
முன்னான பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும். 333.

அந்நிலைமை ஆளுடைய பிள்ளையார்க் கவர்களெலாம்
முன்னறிவித் திறைஞ்சுதலும் முதல்வனார் அருள்தொழுதே
"இந்நிலத்தின் இயல்பெனினும் நமக்கெய்தப் பெறா" என்று
சென்னிமதி அணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார். 334.

"அவ்வினைக் கிவ்வினை" என்றெடுத் (து) "ஐயர் அமுது
செய்த
வெவ்விடம் முன்தடுத் தெம்மிடர் நீக்கிய வெற்றியினால்
எவ்விடத் தும்அடி யார்இடற் காப்பது கண்டம்" என்றே
"செய்வினை தீண்டா திருநீல கண்டம்" எனச்செப்பினார்.
335.

ஆயகுறிப்பினில் ஆணை நிகழ அருளிச்செய்து
தூய பதிகத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேயஅப் பொற்பதி வாழ்பவர்க் கேஅன்றி மேவும் அந்நாள்
தீய பனிப்பிணி அந்நா டடங்கவுந் தீர்ந்ததன்றே. 336.

அப்பதி யின்கண் அமர்ந்து சிலநாளில் அங்ககன்று
துப்புறழ் வேணியர் தானம் பலவுந் தொழுதருளி
முப்புரி நூலுடன் தோலணி மார்பர் முனிவரொடும்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக் கொடுமுடி
சென்றணைந்தார். 337.

பருவ மறாப்பொன்னிப் பாண்டிக் கொடுமுடி
யார்தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்
பொருவில்தா னம்பல போற்றிக் குணதிசைப்
போதுகின்றார். 338.

# திரு. வி.க.

1920—1921-ல் திருச்செங்கோட்டில் நடந்த அர்த்த நாரீசுவரர் தமிழ்ச் சங்கத்து ஆண்டு விழாவின் போது வந்திருந்த திரு வி. க. அவர்கள்

## செங்கோட்டு முருகன் அருள் வேண்டிப் பாடியவை.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து
பொய்யிலே தோய்ந்தவெம் பாவி
மெய்யிலே நிற்க விழைந்தனன் விழைந்து
மேவிய நெறிகளும் பலவே
அய்யனே ! இயலா தலமரு கின்றேன்
அருளொளி வேண்டுமென் றுணர்ந்தேன்
மெய்யனே ! திருச்செங்கோட்டினில் மேவும்
வேலவா எழுந்தருள் செய்யே ! 1

பொய்யிலா நெஞ்சில் புகுந்தருள் விளக்கே!
புனிதனே ! புண்ணிய முதலே !
பொய்யினைக் கழிக்கப் பொய்யனேன் நொந்து
புலம்பிய புலம்பலை அறிவாய்
மெய்யிலே விலங்கும் மெய்யனே ! ஏழை
மெலிந்தனன் நலிந்தனன் அம்மா!
செய்யனே திருச்செங்கோட்டினில் திகழும்
தெய்வமே திருவருள் செய்யே ! 2

மண்ணிலே பிறந்த மனிதனே அடியேன்
மனத்தினாற் பொய்முதற் பாவம்
நண்ணவும் அஞ்சி நடுங்குவ தறிவாய்
நடுங்கினும் தொலைவதோ இல்லை
தண்ணரு ளொளியே சண்முகா ! பாவச்
சார்பிருள் முற்றிலும் சாய்க்கும்
விண்ணெழு திருச்செங்கோட்டினில் விளங்கும்
வேலவா ! அருள் புரிவாயே ! 3

எண்ணிலா உடலம் தந்துதந் திந்த
எழிலுடல் தந்ததும் அருளே
மண்ணிலே பாவ இருளிலே மயங்க
வைப்பதும் அருளினுக் கழகோ
பன்மொழி இருவர் பங்கனே கமலப்
பன்னிரு கண்ணனே ! வேலின்
அண்ணலே திருங்செங்கோட்டினி லமர்ந்த
அப்பனே ! ஆண்டருள் செய்யே ! 4

பாவமே முற்றும் பற்றிடா திருக்கப்
பற்றினேன் பலதுறை முயற்சி
சேவலங் கொடியாய் ! சிறுமகன் முயற்சித்
திறத்துள எல்லையுங் கண்டேன்
ஆவதொன் றில்லை யாது நான் செய்கேன்
அடர்பழி என்றனை யுறுமோ
தேவனே ! திருச்செங்கோட்டினிற் சிறக்கும்
செல்வனே ! காத்தருள் செய்யே ! 5

திருவடி யொன்றே துணையெனக் கொண்டு
தெளிந்தனன் வழியினை அமுதே !
குருவென வந்து குறிக்கொளின் கொள்க
குறிக்கொளா திருப்பினும் இருக்க
கருமமே யுடையேன் கன்றிட மாட்டேன்
கழலிணை மறக்கவும் மாட்டேன்
தருமனே ! திருச்செங்கோட்டினி லெழுந்த
சண்முகா ! தயைநிறை கடலே ! 6

முற்றிய பாவ மூலத்தை யறுக்க
முறையிலா வழிகளில் உழலேன்
சுற்றிய உயிரைத் தொண்டினைத் துறவேன்
துறவெனக் காட்டினுக் கோடேன்
பற்றியே மூக்கை மூச்சினை யடக்கேன்
பாரினைப் பாழெனக் கொள்ளேன்
உற்ற செங்கோட ! உருகியே உயிர்கள்
உயர்பணி செய்ய வேண்டுவனே ! 7

உருகியே அருளால் முனைப்பினை யொடுக்கி
உயிர்வழி நின்பணி உஞற்றக்
கருதிய கருத்தைக் கடவுளே அறிவாய் !
கருத்தது கூடிட அருள்வாய்!

முருகிய வேட்கை மூண்டெழல் காணாய்
மூடனேன் பிறநெறி செல்லேன்
முருகனே ! திருச்செங்கோட்டினி லமர்ந்த
மூர்த்தியே அன்பு வேண்டுவனே. 8

ஆறுமா முகமும் ஆறிரு தோளும்
அணிகடம் பாரமும் அன்பின்
கூறெலாங் கூடித் திரண்டிரு புறமுங்
குலவிய தாய்மையின் பொலிவும்
வீறிடு வேலும் வீரமாமயிலும்
விரை மலர்த் தாள்களும் செம்மை
மாறிலாத் திருச்செங்கோட்டினிற் கண்டு
மனிதனாம் பணியை வேண்டுவனே. 9

நாத்திகப் பணியை நாடிலேன் அடியேன்
நாடுவன் ஆத்திகப் பணியே
நாத்திகம் எனல் "நான்", ஆத்திகம் அறல் "நான்".
"நான்" எனும் பணிகளே உலகில்
ஆத்திரம் ஊட்டும் "நான்" அறும் பணிகள்
ஆருயிர் அன்பினை யோம்பும்
பாத்திரத் திருச்செங் கோடனே ! அருள் செய்
பணியெனும் ஆத்திகப் பணியே ! 10

# சில ஏட்டுப்பாடல்கள்

இப் பகுதியில் சில ஏட்டுச் சுவடிகளில் அர்த்தநாரீசுவரரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. பகுதி 1இல் உள்ள பாடல்கள்திருச்செங்கோட்டு அர்த்த நாரீசுவரரைத் தரிசிக்க வேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்துகின்றன. இப்பாடல்கள் அல்லலுற்ற புலவரின் நெஞ்சத்தை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அர்த்த நாரீசுவரை வழிபட்டால் பிறவித்துன்பத்திவிருந்து மீளலாம். திருச்செங்கோடு தெச்சணக்கைலாயம் என்று போற்றப் பட்டுள்ளது.

பகுதி II-இல் உள்ள பாடல்கள் புலவர் தன்னைப் பெண்ணாக உருவகித்து அர்த்த நாரீசுவரரைப் பெற வேண்டிப் பாடுகின்றார். ஒரு பாடலில் குமரவேல் செட்டியார் குறிப்பிடப்படுகின்றார். இவர் பத்ரகாளி சோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பாகம் பிரியாச் செட்டியார் குமாரன் குமரவேல் செட்டியாராக இருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. கடைசிப் பாடலினால் புலவர் பெயர் சக்கரை என்பதை அறிய முடிகின்றது. கழி நெடில் விருத்தம் பாடுவதில் சிறந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## I

ஆனை வாயில் அகப்பட்ட கரும்புமானேன்
    அங்காடிக் கிரைத்த தொரு வீடுமானேன்
சேனைபடை இல்லாத ராச ரானேன்
    செக்கிலே நெருங்குகின்ற எள்ளுமானேன்
பூனைவாயில் அகப்பட்ட எலியுமானேன்
    பேடுமுகங் காணாத சாவ லானேன்
சேனை யுண்டு அன்னமயில் சிந்து பாடும்
    திருச்செங்கோட் டீசுபரரைத் தெரிசிப்பாயே!

ஆசார மில்லாத சீச னானேன்
    ஆனை புஜ மில்லாத ராச ரானேன்
பாசனந் தின்றதொரு எலியு மானேன்
    படைமுகத்தில் மெய்மறந்த ராச னானேன்

மாசாணப் பூமிதனில் செடியுமானேன்
　　மரமேறிக் கைவிட்ட மந்தியானேன்
தேசாதி தேசத்தில் துணையுங் காணேன்
　　திருச்செங்கோட் டீசுபரரைத் தெரிசிப்பாயே.

அச்சாணி யில்லாத தேருமானேன்
　　ஆகாசக் கொம்புகளில் கனிகளானேன்
உச்சாய மில்லாத உபதேச மானேன்
　　ஊமையன் கண்ட கனாப் போலுமானேன்
முச்சாணுங் கயிறுதனில் மாண்டு போவேன்
　　மூடங் கையில கப்பட்ட மாலையானேன்
தெச்சணங் கைலைதனில் வாழுஞ் சோதி
　　திருச்செங்கோட் டீசுபரரைத் தெரிசிப்பாயே.

## II

.........கண்ணையுங் காட்டிச் செய்கையால் ஒரு பெண்
　　கடைத்தெரு வீதியில் ஒரு நாள்
　கனிவுடன் நடக்கக் கண்டு பின்தொடர்ந்து
　　கைக்கணை யாழியுங் குடுத்து
எண்ணிக்கையாக எழுபது பொன்னும்
　　இணைமுலை ரவிக்கையுந் தந்து
　இன்பமாய்க் கருவி சுகிக்கிரி ரத்துவும்
　　இதுவெலாம் நாரதர்க் குரைத்தார்.
பண்ணைப் பூப்போல தலையெலாம் நரைத்து
　　பணிவிடை வெக்கமில் லாமல்
　பசுப்புநீர் லேசில் பார்வையைக் கண்டால்
　　பார்த்தபேர் நகைத்திடா ரோசொல்
கண்ணனென் தமையன் காதினால் கேட்டால்
　　காசுக்கு நம்பவும் மாட்டான்
　கதைகதை திருச்செங் கோட்டில்வாழ் நாதா
　　கடவுளே கயிலை நாயகனே.

ஆரியக் கூத்து ஆடினால் என்ன
　　அவரவர் காரியம் பெரிதோ
　அவனியில் உண்டு களைப்பவர் தமக்கு
　　அதுவெல்லாம் உமக்குத் தோற்றாமல்
நாரியாள் மனையில் காத்துநீர் அலைந்தால்
　　நானென்ன புத்தியைச் சொல்வேன்
　நரைத்திடுங் கிழவர்க் கித்தனை மோகம்
　　நடக்குமே யிதுகவிப் புதுமை

வீரியமாகப் பேசுநீர் அல்லால்
மேலுக்கோ வேட்டியு மில்லை
வீணருக் கெல்லாம் நாடறிந்திடுங் காண்
மிரட்டினீர் பேச்சை யென் றறிந்து
காரணமாக உந்தனைக் கூட்டி
கலந்து நான் அனுப்புறேன் போங்கள்
கர்த்தனே திருச்சேங் கோட்டில் வாழ் நாதா
கடவுளே கயிலை நாயகனே!

தந்தைதாய் என்ன சனங்களும் இருக்க
திடீரென்று மனைதனில் வந்து
சந்தனக் குழம்பை மார்பினில் தெளித்து
சரசமே செய்யவும் வாரீர்
நிந்தையாய் என்னை எவர்களும் ஏச
நெஞ்சு புண்ணாகினே னுமக்காய்
நீதியாயப் புருசன் மலையனு மிருக்க
நீர்சுகம் காணவே வந்தால்
இந்த அதிசயம் எங்கையும் காணேன்
இருக்கட்டும் நாளை ராத்திரிக்கி
ஏரியின் கீழே மதவடிதனிலே
இருவரும் கூடியே வாழ்வோம்
கந்தையைப் போற்றியென் வளவுக்கு வாரீர்
கணவன் கண்டால் வெகு மோசம்
கர்த்தனே திருச்செங் கோட்டில் வாழ் நாதா
கடவுளே கயிலைநா யகனே!

உடலெல்லாந் தெரியத் துய்ய பட்டாடை
உடுத்தியே ஒருத்தியாய் நடக்க
ஒலிசிலம் பதுவும் கண்டுபின் துடர்ந்து
ஓடினீர் சுயதனில் பிடித்து
குடன்முலை மீதில் நிகம்பதித் திழுக்க
குலுங்கவும் அவள் தகைத்தாளாம்
குமரவேல் செட்டி கடையிலாயிரம் பொன்
குடுத்து நாலு பேர் உரைத்தார்
மடலில்லா சிந்து வண்ணமும் பாடி
மயங்குறீர் பெண்களைக் கண்டால்
நாளை வைய்யாசித் திருவிழா வருதே
மக்களுக் கென்னதான் சொல்வேன்

கடலையும் அவலும் கணபதி கடம்பன்
கடைத்தெரு வீதியில் கேள்ப்பார்
காசுதா திருச்செங்கோட்டில் வாழ் நாதா
கடவுளே கயிலை நா யகனே!

உலகினில் எவரும் துதிக்கவே உமது
உள்ளத்தில் வைத்துமே எனக்கு
உயில் துயிலாடைச் சுரப்பணிப் பதக்கம்
உயிர்தவிக் காதுப்பொன் னோலை
விலைமதியாத சித்திரத் தொட்டி
விடலை சமயமே பின்னும்
வேண்டிய தெல்லாம் மனது கோணாமல்
மேன்மையாய் உரைத்திடுங் கதைபோல்
தலமெனும் திருவரங்கமே காணி
தானரிதாசன் முத்தய்யன்
தனியனான சக்கரை கழில்நெடில் விருத்தம்
சாற்றியே பதினோராங் கதிக்கி
கலியெலாந் தீர அஷ்ட பாக்கியமும்
கருணை கண் நோக்கியே அருள்செய்
கர்த்தனே திருச்செங் கோட்டில் வாழ்நாதா
கடவுளே கயிலைநா யகனே!

# நிலத்தம்பிரான்

திருச்செங்கோடு நகரத்தின் நடுநாயகமாகத் திகழ்வது நிலத்தம்பிரானார் திருக்கோயிலாகும். கைலாயநாதர் ஆலயமே அவ்வாறு அழைக்கப்படுகின்றது. திருச்செங்கோடு நகரம் இக்கோயிலைச் சுற்றி கைதேர்ந்த சிற்பவல்லுநர் களால் தோற்றுவிக்கப்பட்டதென்பதை இப்போதும் அறிய முடிகிறது.

## பல்லவர் காலம்

திருச்செங்கோட்டைப் பற்றிய மிகப் பழமையான பாடல் ஞானசம்பந்தருடையது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு வாக்கில் வாழ்ந்தவர். தமிழகத்தின் பெரும்பாலான பகுதி யைப் பல்லவர்கள் கொண்டிருந்த காலம். இக்காலத்தில் கொங்கு மண்டலம் அதிகமான்கள் வசம் இருந்தது. தருமபுரி (அக்காலத் தகடூர்)யைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த அதிகமான்கள் பல்லவர்களோடு மண உறவு கொண் டிருந்தனர் என்பதை நாமக்கல் கல்வெட்டுகளால் அறி கின்றோம். நாமக்கல்லில் கிடைத்த ஒரு செப்புப்பட்டயத் திலிருந்து சேர அரசர்களின் வமிசாவழி ஒன்று கிடைத் துள்ளது. இச்சேரமன்னர்கள் அதிகமான்களோடு இணை யாக இப்பகுதியில் இருந்திருக்கலாம்.

## செங்கல் கோயில்

அக்காலத்தில் பெரும்பாலான கோயில்கள் செங்கற் களாலேயே அமைக்கப்பட்டிருந்தன. ஞானசம்பந்தர் வந்த போது செங்கல் கோயிலே இங்கு இருந்திருக்கவேண்டும்.

பல்லவர்களும் அதிகமான்களும் புதிய கற்கோயில்கள் பல எடுத்துள்ளனர். ஆனால் இக்கோயில் அவர்களின் பார்வையில் படவில்லை எனத் தோன்றுகின்றது.

## கோபுரம், விமானம்

கருவறையின்மேல் உள்ள பகுதி விமானம் எனப்படும். நுழைவாயிலின் மேல் உள்ளது கோபுரம் எனப்படும்

பல்லவர்கள் காலத்திலும் அதற்குப் பின்னர்வந்த சோழர்கள் காலத்திலும் விமானம் மிகப் பெரிதாகவும் கோபுரம் மிகச் சிறியதாகவும் இருந்தன. காஞ்சி கைலாய நாதர் ஆலயம், தஞ்சை பிரகதீசுவரர் ஆலயம் போன்றவை இவ்வகையின.

சோழர்கள் காலத்திற்குப் பின்னர், விசயநகர மன்னர் கள் காலத்தில் விமானம் சிறியதாகவும் கோபுரம் பெரியதாக வும் வளரத் தொடங்கியது. எனவே இக்கோயில் கருங்கல் கோயிலாக மாறிய காலத்தை 13ஆம் நூற்றாண்டில் வைக்கலாம்.

### கெட்டி முதலிகள்

கி.பி. 12ம் நூற்றாண்டிற்குப் பின் பலகாலம் கொங்கு நாட்டின் இப்பகுதி தாரமங்கலத்தைத் தலைநகராகக் கொண்ட கெட்டி முதலிகளின் ஆளுகையில் இருந்துள்ளது. பேரூர், தாரமங்கலம், பவானி போன்ற பல ஊர்களில் அவர் களின் திருப்பணிகள் உள்ளன. பவானியில் வாயில் கோபுரத் தில் கெட்டி முதலிகளின் இராசமுத்திரையான வாடா மாலையும் வண்ணத்தடுக்கும் வெட்டப்பட்டுள்ளன. அதனருகில் வில் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் உள்ளே கட்டிய கோயில்களில் வாடாமாலை, வண்ணத்தடுக்குடன் வில், புலி, இரண்டு மீன் ஆகியவையும் பொறிக்கப்பட்டுள்ளன. முதலில் தம்மைச் சேரர்களாகக் கருதிக் கொண்டிருந்தார்கள். காலத்தால் வலுப்பெற்ற பின்னர் தம்மை மூவேந்தர் வழிவந்தவர்களாக அறிவித்துக் கொண்டார்கள் என்பது இதனால் விளங்கும்.

முதலிகள் என்று பட்டம் இருந்தாலும், இவர்களை வேளாளர் என்றே ஆராய்ச்சியாளர் கருதுவர். இவர்களின் குறிப்புகள் ஏதும் திருச்செங்கோட்டில் காணப்படவில்லை. எனினும் வரலாற்றுச் சூழலை ஆராயும்போது கல்கோயில் எழுந்தது கெட்டி முதலிகளின் ஆட்சிக்காலத்தில் இருக்கலாம் என்று தோன்றுகிறது.

### கோயில் அமைப்பு

கோயில்களின் உள்ளே அமைந்துள்ள கட்டடங்களை ஆராயும்போது பலகாலகட்டங்களில் அவை தனித்தனியாக கட்டப்பட்டுள்ளமை புலனாகும்.

கருவறையும் முன்மண்டபமும் முதலில்தோன்றியுள்ளன. அதற்குப் பிறகு நெடுநாள் கழித்து அம்மன் கோயில் கட்டப் பட்டுள்ளது. அம்மன் கோயிலைத் திருக்காமக்கோட்டம்

என்பர். ஈசன் கோயிலுக்கு வலப்பக்கமாகவே திருக்காமக் கோட்டம் அமைப்பது வழக்கம்.

திருச்செங்கோடு, உமையொரு பாகனாரின் திருத்தலம். இடப்பக்கம்தான் உமையவள் இருக்கவேண்டும். எனவே அம்மன் சந்நிதியை இடது பக்கம் அமைத்துவிட்டார்கள். கோயில்வலம் வருவோர் முதலில் ஈசனை வணங்கிப் பின்னர் அம்மையை வணங்கி வேலவர் அருகில் வருவது மற்ற ஊர்கள் வழக்கம். இங்கு அம்முறை ஒவ்வாமலிருப்பது காணலாம்.

வேலவர் சந்நதி, அம்மன் சந்நதிக்குப் பின்னர் அமைக்கப் பட்டுள்ளது. ஈசனின் வடமேற்கு மூலையில் சிறிய கோயிலாக இருக்கும். திருச்செங்கோடு வேலவர் தலமாதலால், அப்ப னுக்கும் அம்மைக்கும் நடுவில் தனிக்கோயிலாக அமைத்து விட்டனர்.

ஈசன் கோயிலைச் சுற்றியுள்ள, ஆலமர்ச் செல்வன், துர்க்கை, பிரம்மா போன்றோரின் சிறுகோயில்கள் பிற் காலத்தில் ஒட்டவைத்துக் கட்டப்பட்டுள்ளன. எனவே அவை அதற்கடுத்த காலம் எனலாம்.

ஈசன் கோயிலின் முன்னால் உள்ள அலங்கார மண்டபம் தெலுங்கு நாயக்கர்களின் காலத்தில் கட்டப்பட்டுள்ளது பெத்து நாயக்கரின் மனைவி பங்காசியம்மன் கட்டிவைத்தது அழகான சிற்ப வேலைகளுடன்கூடிய தூண்களால் ஆனது.

கோயிலிலேயே மிகச்சிறந்த வேலைப்பாடு கொண்டது நந்தி மண்டபம் ஆகும். நந்தியின் வடிவம் மிகநேர்த்தியாக உள்ளது. விதானத்தில் தாமரைப் பூவும், நான்கு கல்லாலான சங்கிலிகளும் அழகுக்கு அணி செய்கின்றன. அம்மண்டபத் தில் பல நன்கொடையாளர்களின் சிற்பங்கள் உள்ளன. எனினும் எழுத்து இல்லாததால் யாரென அறிய இயல வில்லை. மலைமேலுள்ள ஆலயத்தில் மோரூர்க் காங்கேயர் பல திருப்பணிகள் செய்துள்ளனர். அதே காலத்தில் அவர் களே இதனையும் செய்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

சுற்றாலையில் பைரவர் கோயிலைக் கட்டியவர்கள் நயினாத்தை முதலியார், வீரராகவ முதலியார் என்போர். தூண்களில் சிலையும் பெயரும் உள்ளன.

சனீஸ்வரன் கோயில் இந்த நூற்றாண்டில் கட்டப் பட்டதாகத் தெரிகின்றது. வேலவர் ஆலயத்தின் முன்னால் அமைந்துள்ளது.

முச்சூட்டு விநாயகர் மண்டபம் தனியாக உள்ளது. நடு விநாயகர் பீடத்தில் வெட்டப்பட்டுள்ள அடையாளங்

களிலிருந்து, இதனை அமைத்தவர்கள் குலாலர்கள் எனத் தெரிகின்றது. பீடம் 11'—0"×11'-0" அளவு கொண்டது. பண்டைக்கால அளவுகளில் ஒரு கோல் என்பது 11'-0" ஆகும் 5 கோல் (55'-0") அகலத்தில் தேரோடும் வீதி இருக்க வேண்டும். திருச்செங்கோட்டுத் தேர் வீதி இதே அளவில் அமைந்துள்ளது எண்ணி மகிழத்தக்கது.

கோயில் மதில்சுவா 247'-6" நீளமும் 244"-9" அகலமும் கொண்டு நெடிதுயர்ந்துள்ளது. 22½ கோல் நீளம் 22¼ கோல் அகலம் எனப் பண்டைய அளவில் கூறலாம்.

கோபுரம் அழகான வேலைப்பாடுகளுடன் 70 அடிஉயரம் ஓங்கியுள்ளது. கி.பி. 1663 இல், மதுரை நாயக்கர்களில் விசுவநாத சொக்கலிங்க நாயக்கர் காலத்தில், அருணை என்னும் ஊரைச் சார்ந்த சேசாத்திரி என்பவரால் இக் கோயில் கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. முன்னால் உள்ள கருடகம்பம் 45 அடிஉயரமும் சிறந்த வேலைப்பாடும் கொண்டதாக அமைந்துள்ளது. வணங்கி நிற்கும் உருவத்தின் அருகில் "சுப்புசெட்டி" என எழுதப்பட்டுள்ளது.

மதிலைச் சுற்றி சிறுதெருவும், அடுத்துள்ள தேரோடும் வீதியும் அமைந்துள்ளன. சேக்கிழார் பெருமான இக் கோயிலை "தம்பெருமான் கோயில்" எனக் குறிப்பிடுகிறார். இதுவே மருவி தம்பிரான் கோயில் என்றாகிவிட்டது. மலை மேல் இல்லாமல் தரையில் இருப்பதைக் குறிக்க, "நிலத் தம்பிரான் கோயில்" என வழங்குகின்றது. தொன்று தொட்டுவரும் பழைய மரபுகளால் புகழ் விளங்கி நிற்பது திருச்செங்கோடு நகரம் ஆகும்.

கோயிலை அளந்து ஆராய்ந்தவர்:
பொறியாளர் இரா. பாட்டையன்.

# தகவல் நிலையம்

ஒரு ஊருக்குப் புதிதாக வருபவர், அந்த ஊரைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள விரும்புவது இயற்கை. அதற்கு ஒரு பொது இடம் தேவை. அங்கு அவ்வூரைப் பற்றி இதுவரை வெளிவந்த எல்லாப் புத்தகங்களும் இருக்க வேண்டும். வேறு ஏதாவது புத்தகங்களில் இவ்வூரைப் பற்றிய செய்திகள் வந்திருந்தாலும் அந்தப் பகுதி பிரதி செய்யப்பட்டு படிப்பதற்குக் கிடைக்க வேண்டும். எல்லோரும் எல்லா நேரத்திலும் அணுகும் வகையில் இருக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிரதி மட்டுமே இருக்குமாதலால், தேடி வருபவர், எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும், அங்கேயே படித்து விட்டுச் செல் வதுதான் நாகரீகம். அங்கேயே அமர்ந்து நகல் எடுத்துச் செல்லலாம்.

இத்தகைய ஒரு பொது இடம் தேடினோம். சேலம் மாவட்ட ஆணைக் குழுவின் திருச்செங்கோட்டுக் கிளை நூலகம் எல்லாத் தகுதிகளையும் பெற்றுச் சிறந்து விளங்கி யது. வாரத்தில் ஆறு நாட்கள் காலையும், மாலையும் திறந்துள்ளது. எல்லோருக்கும் அனுமதி உண்டு. வேறு நல்ல பல நூல்களும் ஏராளமாக உள்ளன.

திருச்செங்கோட்டில் உள்ள கல்வெட்டுகளையெல்லாம் படி எடுத்து பெரிய நோட்டுப் புத்தகத்தில் எழுதி அளிக்கப் பட்டுள்ளது. புதிதாகக் கல்வெட்டுகள் ஏதேனும் தென் பட்டால், அதனைப் படிக்கும் ஆராய்ச்சியாளர் அதில் எழுதி வைக்கலாம்.

திருச்செங்கோடு பற்றிய அரிய நூல்கள் சில சேகரிக்கப் பட்டு அளிக்கப்பட்டுள்ளன. திருச்செங்கோடு மகான்மியம் என்ற மிகப் பெரிய நூல் அதில் ஒன்று.


இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் மிகவும் அவசியம். தமிழ்நாடு பொது நூலகத் துறை கட்டுமானத்திற்குத் தயாராக இருக்கின்றது. ஆனால் அதற்கேற்ற நல்ல இடம் இன்னும் கிடைக்கவில்லை. ஊர்மையத்தில் ஒரு பொது இடம் தேடி அளிப்பது ஊரார் கடமை.

இது போன்ற தகவல் நிலையம் எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். தலைமை ஆசிரியர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆசிரியர்களும் அலுவலர்களும் அவ்வப்போது மாறிக்கொண்டே இருப்பர். புதிதாக வருபவர்களுக்கு எல்லாத் தகவல்களும் ஆயத்தமாகக் கிடைக்கும்.

வளர்ச்சி என்பது நேற்றுவரை அறிந்ததன் மேல் புதிதான அறிவைச் சேர்ப்பது ஆகும். நேற்றுவரை தெரிந்தவை, நமக்குத் தெரியாமல் இருப்பதால், மீண்டும் அலைந்து ஆராய்ந்தாலும் பழைய செய்தியிலேயே நிற்கின்றோம். பழைய செய்தி நமக்குத் தெரிய வாய்ப்பு இருந்தால், புதிய செய்திகள் திரட்டுவதில் நமது முயற்சிகளைச் செலுத்தலாம். முன்னேறலாம்.

# தமிழ் எழுத்துக்கள்
# -- ஒரு புதிய பார்வை

கொடுமுடி சண்முகப் பிரகதம்
ஆசிரியர்—தேனோலை



நெல்வேலிஈய்சழிவன்
ஆதனன்வெளியன்
முகைகைகொடுவோன்
—கல்வெட்டுத் தமிழ்

# தமிழ் எழுத்துக்கள்
# -- ஒரு புதிய பார்வை

## வரிவடிவம்

1 **தமிழ் வரிவடிவம், குறை உடையதா?**

**இல்லவே இல்லை!**

2 **தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இதே வடிவத்தையா கையாண்டனர்?**

**இல்லை. எழுத்து வடிவம் காலங்கள் தோறும் உருமாறி இன்றைய நிலையை அடைந்துள்ளன!**

3 **மேலும் செப்பங்கள் இயலுமா?**

மிகச்சிறிய, மாற்றங்கள் சில உண்டு. தமிழின் புழக்கத்தை எளிதாக்கும் பொருளாதார முன்னேற்றங்கள் பல உண்டு. தமிழன் முன்னேற வழியுண்டு.

மொழிக்கு ஒலி எழுத்துக்களே உயிர். அதனாற்றான் தொல்காப்பியர் ஒலிக்கும் முறை கூறினாரே அன்றி வரிவடிவ இலக்கணம் முழுக்கக் கூறவில்லை. வரிவடிவம் அன்னையின் ஆடை, அணி, மணி போன்றது. ஒரு சில புதுமைகளால் சிறப்பே விளையும்.

## தமிழ் எழுத்துகள்

| | |
|---|---|
| உயிர் | 12 |
| மெய் | 18 |
| உயிர்மெய் | 216 |
| ஆய்தம் | 1 |
| மொத்தம் | 247 |

## இவற்றிற்கான வடிவங்கள்

| | |
|---|---|
| அச்சில் | 120 |
| தட்டச்சில் | 65 |

தட்டச்சில்—

எழுத்துகள் தனியாகவும்,
மெய்ப்புள்ளி,
இகர, ஈகார மேல் விலங்குகள்,
உகர, ஊகார கீழ் விலங்குகள்
தனியாகவும் உள்ளன.
ஒன்றன் மீது ஒன்றாகச் சேர்க்க முடியும்.

அச்சில்—

ஒன்றின் மீது மற்றதைச் சேர்க்க இயலாது.
பக்கத்தில்தான் சேர்க்க முடியும்.
அதனாலேயே வடிவங்களின் எண்ணிக்கை கூடி யுள்ளது.

## சீர்மை (Uniformity)

தற்போதைய வடிவங்களில் சீர்மை இல்லை.
ஆகார வரிசையில் —றா, ணா, ரு
உகர வரிசையில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்
ஊகார வரிசையும் அவ்வாறே
ஐகார வரிசையில் —லை, ளை, னை, ணை,
ஒகார வரிசையில், ஆகாரப் பிழை

இதனால் தமிழ்ப் பிள்ளைகள்
சின்னஞ் சிறு பருவத்தில் இடர்படுகின்றனர்.
அந்தச் சுமையைக் குறைக்க வேண்டாமா?

## வடிவங்களின் எண்ணிக்கை குறைந்தால்

1 தமிழ்ச் சிறார் சுமை குறையும்

2 குறைந்த வடிவங்களை நினைவில் கொண்டு விரைவில் கற்பர்

3 ஒரே தட்டச்சில் ஆங்கிலம், தமிழ் இரண்டையும் அமைக்கலாம்.

4 மின் அச்சு (ELECTRONIC COMPOSING) சாத்திய மாகும்

5 தொலை அச்சு (TELEX) தமிழில் இயலும்

6 கணிதிகள் (COMPUTERS) தமிழில் இயலும்

7 மின் தட்டச்சின் விலை குறையும் (ELECTRONIC TYPEWRITER)

8 வங்கிகளில் காசோலை எழுதும் பொறி தமிழில் இயலும்

9 அச்சுத் தொழில் எளிதாக, செய்திப் பரவல் விரைவாகும்

10 பிராட்மா அச்சு (BRADMA PRESS) மூலம் முக வரிகள், சிறு குறிப்பட்டைகள், மருத்துவ மனைக் குறிப்புகள், காப்புறுதிக் கழகக் குறிப்புகள் முதலியன தமிழில் இயலும்

11 தமிழர்களின் சாவிக் கொத்தில் தமிழ் இடம் பெறும்

12 இன்ன பிற ஏராளம

## எப்படிக் குறைக்கலாம்?

1 பெரியார் புழங்கியபடி:

லை, ளை, னை, ணை றா, னா, ணா

[இதனல் 7வடிவங்கள் மிச்சம். ஆகார ஐகார ஓகார வரிசைகள் முழுக்கச் சீர்மை பெறுகின்றன]

2 உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக்குறி சேர்த்தல்

[இதனால் 36 எழுத்துக்கள் மிச்சம். இரண்டு வரிசை களும் சீர்மை பெறுகின்றன]

3 உயிர் நெடில்களுக்குக் குறிலுடன் கால் சேர்த்தல்:

அா, இா, உா, எா, ஒா

[இதனால் ஐந்து எழுத்துகள் மிச்சம்]

## புதிய வடிவங்கள்

| | | |
|---|---|---|
| உயிர் | 6 | அ, இ, உ, எ, ஐ, ஒ |
| மெய் | 18 | கஙசஞடணதநபமயரலவழளறன |
| உயிர்மெய்க் குறிகள் | 8 | ா ி ீ ு ூ ெ ே ை |
| மெய்ப் புள்ளி | 1 | · |
| ஆய்தம் | 1 | ஃ |
| மொத்தம் | 34 | |

[இவை தட்டச்சிற்கு அப்படியே பொருந்தும். அச்சிலும் பொருந்தும் இகர, ஈகார ஒட்டுக் குறிகளை முன்பு சுதேசமித்திரனில் வந்தது போலத் தனியாக ஒட்டிக் கொள்ளலாம். மெய்ப்புள்ளியையும், சற்றே தள்ளி வைக்கலாம். இவை முயற்சி ஏதுமின்றித் தானே வந்துவிடும்.]

## உகர, ஊகாரப் பக்கக் குறிகள்

ஏற்கனவே பழக்கமான ு, ூ குறிகளையே போடலாம்.

அவை —

வடமொழியில் இல்லை

வடநாட்டிலும் இல்லை

வேறு திராவிட, இந்திய மொழிகளிலும் இல்லை

தமிழ் நாட்டில் மட்டுமே உண்டு

தேவநாகரிக்கு மாற்றாகத் தமிழர் கையாண்ட கிரந்தம் பழகிய குறியாதலால், மாறுதல் எளிது.

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ போன்ற எழுத்துக்களை தமிழில் புழங்குகிற களங்கத்தைத் தவிர வேறு பழுதில்லாதது.

தமிழ் மக்களிடையே எடுத்த கருத்துக் கணிப்பில் சுமார் 80% இதையே தேர்ந்தெடுத்தனர்

எனினும் இதனை மீண்டும் பரிசீலித்து அரசாங்கம் ஏற்கும் குறியைப் புழங்கலாம்.

## பிற மொழிகளில்

1 எழுத்துக்களைச் செப்பம் செய்யும் முயற்சியைக் கேரள அரசாங்கம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்டு, உகர ஊகார உயிர் மெய் வரிசைக்குப் பக்கக் குறி சேர்த்து வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

உகரம்: ு

ஊகாரம்: ூ

2 இந்தியில் உகர, ஊகார வரிசையில் சீர்மை ஏற்கனவே உள்ளதால், அதன் வடிவங்களின் எண்ணிக்கை குறைவே.

## ஆதரவுகள்

1 இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் புதுச்சேரித் தாகூர் கல்லூரியில் கலந்துரையாடி அறிந்து கொண்டது.

2 தமிழகப் புலவர் குழுவின் முன்னோடிப் பரிந்துரைக்குழு உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக் குறிபோடும் திட்டத்தைப் பரிந்துரை செய்துள்ளது. [௮ ௭]

3 கொங்கு, தேனோலை, கலைக்கதிர், உண்மை, தினமலர், மற்றும் எல்லா இலங்கை ஏடுகள், இதழ்கள் வாயிலாக எழுத்துச் சீர்மை பற்றிய கருத்துக்கள் வழங்கப்பட்டு, மாற்றுக் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. மக்கள் ஆதரவு நிறைய உண்டு.

4 அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இதே போல மூன்று கட்டுரைகள் வந்தன. உலகத் தமிழரின் ஆர்வம் இதனால் விளங்கும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந் தன்றும் இலமே
கல்பொரு திரங்கு மல்லல் பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணை போல்
ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது
திறவோர் காட்சியில் தெளிந்தனம் ஆகலின்
மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

மக்கள் வெளியீடு இலக்கியம்
இணைப்பு—அக்டோபர் 1977
No i TN/MSN/47

கொடுமுடி சண்முகப் பிரகதம்
ஆசிரியர்—தேனோலை
54 A வேலூர்ச் சாலை
திருச்செங்கோடு 637217

# புதிய வெளியீடுகள்

தேனோலை ஆசிரியர், கொடுமுடி சண்முகப் பிரகதம் அவர்கள் எழுதிய

"புதிய தமிழ் வடிவம்"

என்ற நூல் வெளியாகி விட்டது. விலை ரூ 10/- தமிழ் வரி வடிவில் தேவையான மாற்றங்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சி நூல்.

தேனோலை பழைய இதழ்கள் பைண்டு செய்த தொகுதிகள் தயாராகி விட்டன. ஆராய்ச்சியாளர்களுக்கு விலைக்குக் கிடைக்கும். வேண்டுவோர் எழுதுக.

## எழுத்துச் சீர்மை.

1. உகர, ஊகார உயிர் மெய்களுக்கும் [illegible] குறி இடுதல்.

2. உயிர் நெடில்களுக்கு, குறிலுடன் கால் சேர்த்தல்.

தெய்வத்தான் ஆகாதெனினும்
முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

**All kinds of tyres from Scooter to Tractor tyres**

**are reteaded most scientifically in our Modern Plant**

OFFICE OF THE CURATOR
RECEIVED
24 ஏப் 1979
MADRAS-5
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

*FOR QUICKER AND DEPENDABLE RETREADING*

*Contact :*

# The Anamallais Retrading Corporation

104, MOUNT ROAD — GUINDY

**MADRAS - 600 032.**

***Dial : 433286, 433287, 433288***

ஆசிரியர், வெளியிடுபவர்: கொடுமுடி சண்முகப் பிரகதம், 11-ஆ, இரண்டாம் பெருஞ்சாலை, இந்திரா நகர், சென்னை-600020.
அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.